# INTERNATIONAL COMMISSION OF JURISTS

Commission internationale de juristes - Comisión Internacional de Juristas

*" dedicated since 1952 to the primacy, coherence and implementation of international law and principles that advance human rights "*

## சர்வதேச நீதிவல்லுநர்களின் ஆணையம்

பத்திரிகை அறிக்கை

15 டிசம்பர் 2006
ஜெனீவா

P R E S S R E L E A S E

உடனடி வெளியீட்டுக்காக

**சர்வதேச நீதிவல்லுநர்களின் ஆணையம் (ICJ) இலங்கை பாராளுமன்றத்திடமும் அரசாங்கத்திடமும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு விதிமுறைகளில் காத்திரமான மாற்றங்களை ஏற்படுத்துமாறு கோரிக்கை விடுக்கிறது.**

சர்வதேச நீதிவல்லுநர்களின் ஆணையம் (International Commission of Jurists – ICJ) இன்று இலங்கை பாராளுமன்றத்திடமும் அரசாங்கத்திடமும் இலங்கை ஜனாதிபதியினால் டிசம்பர் 6, 2006 இல் அறிவிக்கப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்பு விதிமுறைகள் மீளாய்வு செய்யப்படவேண்டுமென்றும், அது சட்டரீதியானதும் அமைதியானதுமான செயற்பாடுகளையும் குற்றமாக கருதாதவாறும் பொதுவான சட்டஒழுங்கை மதிக்குமாறும் திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறது.

“இவ்விதிமுறையானது பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான தெளிவான வரையறையற்றதாக இருப்பதனால் அது சட்டரீதியாக குற்றமாகக் கருதப்படும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு அப்பாலும் விரிவடைவதாக இருக்கிறது” என்று ச.நீ.ஆணையத்தின் உலக பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளரான, ஜெரால்ட் ஸ்ரீபரொக் தெரிவித்தார்.

“இவ்விதிமுறையானது பயங்கரவாதத்துடன் தொடர்புடைய ஏனைய விடயங்களைக் கையாளும் அதேசமயம் அமைதியான பேரணிகளை நடத்துபவர்களையும் சமாதானமாக இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கு முயலும் மனிதாபிமான தொண்டர்கள், மனித உரிமைவாதிகள், ஊடகவியலாளர்கள் போன்றோரைத் தண்டிப்பதற்கும் வழிவகை செய்வதாக அமைந்துவிடக்கூடும்” என்று அவர் குறிப்பிட்டார்.

“உண்மையில் இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளுடன் தொடர்புடைய எவரும் அல்லது பயங்கரவாத சந்தேகநபர் ஒருவருடன் ஒரு சிறிய அறிமுகத்தையாவது கொண்டிருக்கும் எவரையும் பயங்கரவாதி என்று சந்தேகிக்கும் நிலமை ஏற்படலாம்”.

ச.நீ.ஆணையம் இலங்கை பாரதூரமான பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதை, குறிப்பாக அண்மைக்காலத்தில் கெப்பிட்டிகொலேவவில் 68 பொதுமக்கள் கிளைமோர் குண்டுவெடிப்பில் ஜூன் மாதம் கொல்லப்பட்டதும், அரச சமாதான செயலகத்தின் பிரதி செயலாளர் நாயகம் கொழும்பில் ஆவணி மாதம் கொல்லப்பட்டதும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்மீது டிசம்பர் மாதம் கொழும்பில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது போன்றவற்றை அறிந்திருக்கிறது.

இருந்தபோதிலும், குறிப்பாக புதிய கிரிமினல் குற்றங்கள் வரையறை செய்யப்படும்போது, அப்பாதுகாப்புச் சட்டங்கள் பொதுவான சட்ட நியாயங்களுடன் ஒத்திருப்பது மிக முக்கியமானது: மக்கள் தாம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் கிரிமினல் குற்றமாக கருதப்படுமா இல்லையா என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். அதுமாத்திரமன்றி கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கும், அணிதிரள்வதற்கான சுதந்திரம் போன்ற நியாயபூர்வமான யாப்புரிமைகளை சட்டவிதிகள் கிரிமினல் குற்றங்களாக கருதக்கூடாது.

The ICJ is an international non-governmental organisation comprising sixty
of the world's most eminent jurists and has a worldwide network of national sections and affiliated organisations

33, rue des Bains, P.O. Box 91, 1211 Geneva 8, Switzerland
Tel: +41(0) 22 979 3800 – Fax: +41(0) 22 979 3801 – Website: http://www.icj.org - E-mail: info@icj.org

இவ்விதிமுறையின்படி பொதுஒழுங்கைச் சீர்குலைக்கும் செயற்பாடுகள் எவையும், அவற்றின் நோக்கம் ''அரசியல்ரீதியாகவோ அல்லது அரசாங்கத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்காகவோ'' அல்லது ''ஒரு விடயத்தை செய்ய அல்லது செய்யாதுவிடும்படி'' அரசாங்கத்தை வற்புறுத்துவதற்காகவோ மேற்கொள்ளப்படுமானால் அது கிரிமினல் குற்றமாக கருதப்படும். பொதுப்படையான இவ்வார்த்தைப் பிரயோகங்கள் சட்டபூர்வமான செயற்பாடுகளான அமைதிப் பேரணிகள், தொழில்சார் வேலைநிறுத்தங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதையும் பங்குபற்றுவதையும்கூட குற்றங்களாக கருத இடமளித்துவிடக்கூடும்.

இவ்விதிமுறையானது பயங்கரவாத சந்தேகநபர் என்று தெரியாமல் ஒருவருக்கு உதவி செய்தால் அல்லது தமது செய்கையானது அச்சந்தேகநபருக்கு உதவுவதாக இருப்பது தெரியாமல் ஒரு உதவியைச் செய்தால் அதற்காக ஒருவர் தண்டிக்கப்படுவதற்கு இடமளிக்கும். உதாரணமாக, பயங்கரவாதத்துடன் தொடர்புடைய நபரை அல்லது ஒரு குழுவை அவர்கள் யாரென்று தெரியாமலேனும் ஆதரித்தால், அறிவுரை வழங்கினால், ஊக்குவித்தால், பிரச்சாரப்படுத்தினால் அல்லது உதவி செய்தால் அதற்காக ஒருவருக்கு 5 தொடக்கம் 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

''சர்வதேச சட்டங்களின்படி ஒரு அரசாங்கம் வன்முறை, இனக் குரோதம், பயங்கரவாத செயற்பாடுகள் போன்றவற்றை தூண்டும் ஒருவரை சட்டத்தின் முன்நிறுத்தும் உரிமையைக் கொண்டுள்ளது. ஆயினும், ஏதாவது ஒருவிதத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பங்களித்த ஒருவர் அதில் முழு மனதுடன் மனப்பூர்வமாகவே ஈடுபட்டார் என்று அச்சட்டங்கள் தெளிவாகக் கருதுவதில்லை. எனவே இலங்கையில் நிலவும் முரண்பாடு பற்றிய வெளிப்படையான, பெரும்பாலும் சர்ச்சைக்குரிய விவாதமொன்று ஏற்படுவதற்கு இவ்விதிமுறையானது அச்சுறுத்தலாக இருக்கின்றது'', என்றார் ஜெரால்ட் ஸ்ரீபரொக்.

இவ்விதிமுறையானது மனிதாபிமான உதவிகள், இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கான முயற்சிகள், மனித உரிமைகள் சார்ந்த செயற்பாடுகள் போன்றவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ச.நீ.ஆணையம் கவலை தெரிவிக்கிறது. இவ்விதிமுறையின்படி தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் 'பயங்கரவாதத்தில் ஈடுபடுகின்ற' அல்லது 'குறிப்பிட்டவொரு பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுகின்ற' ஒரு நபருடன் அல்லது குழுவுடன் தொடர்பேற்படுத்த முன்னர் 'அதிகாரபூர்வமான ஆணையமொன்றிடம்' முன்கூட்டியே எழுத்துமூலமான அனுமதியை பெற்றிருக்கவேண்டும். நடைமுறையில் இது வடக்கு, கிழக்கில் உதவி மற்றும் நிவாரண வேலைகளில் ஈடுபடும் அமைப்புகளையே பாதிக்கும்.

''வடக்கு கிழக்கில் வாழும் ஏராளம் பொதுமக்கள் தேசிய, சர்வதேச நிறுவனங்கள் வழங்கும் உதவி மற்றும் நிவாரணங்களில் தங்கியிருக்கிறார்கள். இந்நிறுவனங்கள் தமது சட்டபூர்வமான இச்செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு தடங்கல்கள் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு நாம் உரிய அதிகார மையங்களிடம் கோருகிறோம்'' என்று ஜெரால்ட் ஸ்ரீபரொக் தெரிவித்தார்.

இவ்விதிமுறையானது அனுமதி வழங்கவல்ல 'அதிகாரபூர்வமான ஆணையமொன்றின்' முடிவிற்கு எதிராக முறையீடு செய்ய ' மேன்முறையீட்டு இணக்கசபை' (Appeals Tribunal) ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இருந்தபோதிலும் எந்தவொரு மேன்முறையீட்டுச் செயற்பாடும் சுதந்திரமான, பக்கச்சார்பற்ற நீதிச்சபையினால் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட, வெளிப்படையான, நியாயமான செயன்முறையை பின்பற்றுவதாக இருக்கவேண்டும். ஆனால் பிரதான அரசாங்க அமைச்சுக்களின் பிரதிநிதிகளையே கொண்டிருக்கும் இம்மேன்முறையீட்டு இணக்கசபையானது இந்த நியமங்களைப் பின்பற்றவில்லை என்பது தெளிவு.

அவ்வாறே அரசாங்க உத்தியோகத்தர்கள் இவ்வதிகாரங்களைப் பிரயோகிக்கும்பொழுது தவறிழைத்தால் அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதை இவ்விதிமுறையானது தடுத்து அவர்களைக் காப்பாற்றவதும் இங்கு அவதானத்திற்குரியதாகும். அதிகாரியொருவர் 'தனது கடமையின் நிமித்தம் நன்னோக்கத்துடன் செயற்பட்டார்' என்ற அடிப்படையில் அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதை இவ்விதிமுறையானது தடுக்கிறது. இலங்கையிலுள்ள ஏனைய பாதுகாப்புச் சட்டங்களிலும் இத்தன்மை காணப்படுகிறது. இலங்கையில் ஏற்கனவே நிலவும் 'குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பித்துச் செல்லும்' கலாச்சாரத்தை மேன்மேலும் ஊக்குவிப்பதாக இது அமையும்.

இவ்விதிமுறைகள் தொடர்பாக பாராளுமன்றம் வெளிப்படையான விவாதங்களில் ஈடுபடவேண்டும் என்று ச.நீ.ஆணையம் கோரிக்கை விடுக்கின்றது. இவ்வாறான விதிமுறைகள் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை கொண்டுள்ள கடப்பாட்டுக்கும் நீதியின் ஆளுகைக்கும் அமைவாக்கப்படுவதன் மூலம் நீதியானதாகவும் நியாயமானதாகவும் இருக்க காத்திரமான மாற்றங்கள் செய்யப்படவேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து லைலா கரிமி *(Laila Karimi)* யைத் தொடர்பு கொள்ளவும். +4122 979 3818.